மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

வண்ணம் : சந்தம் காலந்தோறும் மாற்றமும், பொருள் விளக்கமும்

த. அறிவழகன்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

தொல்காப்பியப் பொருளதிகாரச் செய்யுளியலில் 34 உறுப்புகளில் ஒன்று வண்ணம். இவ்வண்ணம் அழகு, சந்தம், இசை, நிறம், ஓசை, நன்மை, சித்திரம், மாலை, சிறப்பு, இனிமை எனப் பல பொருள்களைக் கொண்டது. இறைவன் புகழ்பாடவும், மன்னர்களைச் சிறப்பிக்கவும், புலவரின் வறுமையைப் போக்கவும், இன்ன பிறவற்றிற்காகவும், பாடப்படும் வண்ணம் வாய்மொழி இலக்கியங்களில் தோன்றி தொல்காப்பியர் காலத்தில் இருபதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. யாப்பருங்கலக்காரிகை நூறு எனச் சுட்டுகிறது. அதற்கு பின்னர் வந்த இலக்கண நூல்களான இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் போன்றவை வண்ணங்களின் வளர்ச்சியாகத் தொல்காப்பியர் காலத்தையும் முந்தைய என்பதற்கு வாய்மொழிப் பாடல்களான நாட்டுப்புறப்பாடல்கள் சான்றாகின்றன.

"தன்னானனே" போன்ற ஓசைகள் இதற்கு எடுத்துக்காட்டு ஆகும். கி.மு 2 ம் நூற்றாண்டு முதல் கி.பி. 2 ஆம் நூற்றாண்டு வரையிலான சங்க இலக்கியத்தில் ஒன்றான பதிற்றுப்பத்தில் ஒழுகு வண்ணம், சொற்சீர்வண்ணம் என இரு வகையாக வண்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. வண்ண வரலாற்றில் மிகவும் இன்றியமையாத காலமாகக் கருதப்படுது. கி.பி 7 ம் நூற்றாண்டு ஆகும். இக்காலக்கட்டத்தில் திருஞான சம்பந்தர் "வண்ணம் மூன்றும் தமிழில் தெரிந்து இசைபாடுவார்" என்கின்றார். அவிநயனார் காலத்தில் வண்ணம் நூறாக வளர்ச்சி பெற்றது. கி.மு. மற்றும் கி.பி என வளர்ச்சிபெற்று வந்த வண்ணத்தில் பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. மரபு வழியாக யாப்பு வடிவில் இயற்றப்பட்டு வந்த செய்யுள் வடிவங்கள் உரைநடை வளர்ச்சி எட்டிப்பார்த்த இந்நூற்றாண்டுகளில் வண்ணங்களின் வளர்ச்சி குறையத் தொடங்கியுள்ளது.

வண்ணம் வரும் இடங்கள்

வண்ணம் ஒரு பாடலின் அடிகளில் எழுத்து, சீர், அசை, அடி போன்றவற்றுள் முதல், இடை, கடை எந்த இடத்திலும் வரலாம். அவ்விடம் வண்ணத்தால் தனித்து வெளிப்படும். தொல்காப்பியர் இலக்கியத்தின் அடிப்படையான செய்யுள்களுக்குப் பலவகையில் அழகு செய்துள்ளார். கூற்று உரைப்பவர்க்கும், கேட்பவர்க்கும் இன்பம் தரக்கூடிய வண்ணம் இசை, நிறம், சந்தம், ஓசை, பண்பு என பலவகைகளில் செய்யுளை அழகு செய்கிறது. இங்ஙனம் தொல்காப்பியரும் அதற்குப்பின் வந்த இலக்கண நூலாசிரியர்களும், புலவர் பெருமக்களும் வண்ணத்தை வகுத்த தன்மையினையும், வண்ண வளர்ச்சியையும், அதன் வகைகளையும் அறியமுடிகிறது.

வண்ணம் விளக்கம்

தொல்காப்பியர் வண்ணம் எனக் கூறப்பட்டுள்ள செய்யுள் உறுப்பிற்கு அகராதிகளும், திறனாய்வு நூல்களும் பல விளக்கங்களைத் தருகின்றன.

சூடாமணி நிகண்டு

வண்ணம் என்பதை "அழகு" பற்றிய நற்பத்திரண்டு பெயர்களுள் ஒன்று என்று விளம்புகின்றது. இந்நிகண்டு "வண்ணம்" என்பதற்குச் "சந்தம்" எனும் பொருளைத் தருகிறது. வடமொழியில் "சந்தம்" என்பதற்கு "அழகு" என்பது பொருள். எனவே வண்ணம் என்றாலே அழகு என்று பொருள்படுகிறது.

தமிழ் - ஆங்கில அகராதி

வண்ணம் என்பதற்கு இராகம் (melody), குணம் (manner), சந்தம் (harmany), நிறம் (colour), வடிவு (form), ஆகிய பொருள்களைக் குறிப்பிடுகிறது.

தமிழப் பேரகராதி

வண்ணம் என்ற சொல்லுக்கு அழகு என்ற பொருள் தருகிறது. வண்ணம் என்பதற்குப் பாவின் கண் நிகழும் ஓசை விகற்பம் (verse rhythm) சந்தப்பாட்டு, (rhythmic verse with regular beats) குணம் என்ற பொருள்களைத் தருகிறது. தமிழ் மொழியகராதி வண்ணம் என்பதற்கு அழகு, இராகம், குணம், சந்தம், சந்தனம், நிறம், வாசனை என்ற பொருளைத் தருகின்றது. நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ்மொழி அகராதியின் செம்பதிப்பு, வண்ணத்திற்கு அழகு, இராகம், குணம், சந்தம், சந்தனம், சாதுப்பொது, நிறம், முடுகியல், வடிவு, வாசனை, ஒப்பனை, சந்துப்பொது, செயல், நன்மை, விதம் என பொருள் தந்துள்ளது.

தமிழ்- தமிழ் ஆங்கில அகராதி

வண்ணம் என்பதற்கு நிறம், அழகு, ஒப்பனை, குணம், சிறப்பு, கணம், வடிவு, இனம், வகை, மாலை, செயல் என்ற பொருள்களைத் தருகிறது. செய்யுள் என்பது பல வடிவம் உடையது. சுவை இன்பம் தரவல்லது. புரியாத புதிரைப் புரிய வைக்கும் தன்மையுடையது. செய்யுள்கள் வெவ்வேறு ஓசை நயம் உடையனவாய்ப் படிப்போர்க்கும், கேட்போர்க்கும் சுவை பயக்கும் இனிய பாக்கள் வண்ணம் என வழங்கப்பெறும். இதன் அடிப்படையில் வண்ணம் என்பது இசைப்பாக்களுள் ஒன்றாகக் கருதப்படும்.

பண்டைத் தமிழ் இசையிலக்கண நூல்களில் காணப்படும் சிந்து, திரிபதை, சவலை, சமபாதம், செந்துறை, வெண்டுறை, தேவபாணி என்பன வண்ணம் என்ற பொருளைத் தருகின்றன. இந்த இசைப்பாக்கள் நாட்டுப்புறப் பாடல்களாகவும் தற்போது செவ்விசை அரங்குகளிலும், நாட்டிய அரங்குகளிலும் இடம்பெறும் செவ்விசைப் பாடல்களாகவும் வளர்ச்சியடைந்துள்ளன என்பது தெரிகிறது.

மேற்கூறியவற்றால் வண்ணம் என்ற செய்யுள் உறுப்பானது பாட்டின்கண் நிகழும் ஓசை வேறுபாடு சந்த வேறுபாடு, செய்யுள் அமையும் வகை, விதம், வடிவம், இராகம், வாசனை, நன்மை, சித்திரம், சிறப்பு, மாலை, இசை என்ற பொருட்களைக் கொண்டது என்பது தெளிவாகிறது.

அறிஞர்கள் கூற்று

தொல்காப்பியர் கூறிய முப்பத்து நான்கு உறுப்புகளுள் ஒன்று வண்ணம். இவ்வண்ணம் நாட்டுப்புறப்பாடல், கூத்துப்பாடல், கும்மிப்பாடல், சிந்து, கண்ணி (தனனான தானனே) என்ற நாட்டுப்புறப்பாடல்களில் மக்கள் வாய்வழியாக வண்ணத்தைப்பாடி இன்பம் துய்த்தனர். இதனால் வண்ணம் மக்களிடையே பெருவழக்கில் இருந்தது. இவ்வண்ணமானது கேட்பவர்க்கு இன்பத்தைத் தரக்கூடியது. இன்பம் பொருந்திய இவ்வண்ணத்திற்குப் பல்வேறு அறிஞர்கள் கூற்றுகள் அறியதக்கன.

செய்யுள் இசை வடிவானது வண்ணம் என்பது செய்யுளுறுப்பாதலால் இதனை இசையின் ஒரு பகுதியாகக் கருதவியலும், இதற்கு அனைவருக்கும் மகிழ்ச்சி தருகின்ற ஒன்றினை அதாவது மகிழ்ச்சி தருகின்ற இசையினை வண்ணம் என்ற சொல்லால் குறித்தனர் என்னும் கூற்று வண்ணத்திற்கு வலிமை சேர்க்கிறது. அத்துடன் வண்ணம் என்பது இசை என்ற கருத்தும் பெறப்படுகிறது.

வண்ணமாவது இசை தொடர்பான குறிப்புடன் தொல்காப்பியத்தில் முப்பத்தேழு இடங்களில் காணப்படுகிறது என்று ஜானகி சுட்டுகிறார். இவற்றால் படிப்பவர்க்கு இன்பம் பயக்கும் படியாகவும், பாடுவதற்கு ஏற்பவும் செய்யுள் அமைய வேண்டி வண்ணத்தினை அமைத்தனர் என்பது தெரிகிறது.

வண்ணம் என்னும் சொல் நிறத்தைக் குறிக்கும் (வண்ணம் - வருணம்). வண்ணப்பாடல்களில் ஒலியின் நிறம் உண்டு. வண்ணங்களில் எழுந்தோடும் ஒலியின்

ஒழுக்கு மிக்க இனிமையானது. உணர்ச்சியூட்டுவது, ஆதலால் அதனை ஒலியின் நிறம் என்று விளக்கலாம். வண்ணம் என்பது சந்த வேறுபாட்டு ஒலியின் நிறம் என்று வரையறுக்கப்படுகிறது.

செறிவுள்ள பல கருத்துகளைப் புலவன் ஓசை மிகுந்து செய்யுளில் இயற்றும் தன்மை வண்ணம் எனத்தெரிகிறது. இதனைப் புலவர் இரா.இளங்குமரன் "கேட்பார்க்குப் பயனுண்டாகப் புலவனால் படைக்கப்படும் புதுமைப் பொருள் கூறப்படும் பொருளின் துறை, ஒன்றனோடு ஒன்று பொருந்தி நிற்கும் வகை ஓசை இன்பம் வண்ணம்" என்பார்.

ஓரின எழுத்துக்களின் ஒலியனால் எழுப்பப்படும் ஓசை வண்ணம் எனத் தெரிகிறது. இதனை இ.சுந்தரமூர்த்தி "ஒரே ஒரு ஒலி அல்லது அதற்கு இனமான ஒலிகள் ஓர் அடியிலோ பாடல் முழுவதுமோ பயின்று வருவதனை வண்ணம்" என்று கூறுவர். இக்கருத்தைச் சற்று மாற்றியவாறு புலவர் குழந்தை "ஓரடியின் ஒரு சீரின் ஓரசை என்ன எழுத்தாக வருகிறதோ, அவ்வாறே அடுத்த அடியின் அதே சீரின் அவ்வசை அந்த எழுத்தாகவே வருவது வண்ணம் - சந்தம்" என்பர்.

இசைக்கு இனியவர்கள் மட்டுமன்றி இனம் புரியாதவர்களும் மயக்கம் கொள்வார். இதனால் "எந்தக் கவியினும் சந்தக்கவியே மேல்" என்ற கூற்றுத் தெளிவுறுத்துகிறது. இசையின் சிறப்பை அறிந்த தண்டபாணி சுவாமிகள் "ஓசையின்பம் பாடும் கவிதை நெறியே வண்ணம்" என்று கூறுகிறார். மேலும் "யாப்பு பொருள் நோக்கி வரும் வண்ணம் ஓசை நோக்கி வரும்" என்கிறார்.

வண்ணமும் சந்தமும் ஒரு பொருள் குறித்த சொல்லாக வழங்கப்படுகின்றன. இருப்பினும் வண்ணம் வேறு சந்தம் வேறு எனக்கூறுவோம் உளர். தோற்ற அடிப்படையில் வண்ணம் என்ற சொல் பிராகிருத மொழியிலிருந்தும் சந்தம் என்ற சொல் சமஸ்கிருத மொழியிலிருந்தும் பெறப்பட்டவை. ஆனால் அவை தமிழில் புதிய பொருளில் ஒரு குறிப்பிட்ட பாவகையை உணர்த்துபவை என்று சங்க இலக்கிய யாப்பியல் நூலின் ஆசிரியர் பிச்சை கூறியுள்ளார்.

இங்ஙனம் "வண்ணம் என்பது சந்த வேறுபாட்டினைக் குறித்தது. ஆதலின் பாட்டில் பரந்துள்ள ஓசையினையும், சந்ததினையும் கேட்ட அளவில் ஒருவாறு பாட்டின் பொருளை உய்த்துணரலாம். ஆங்கிலத்திறனாய்வாளர் The sound echoes the sense என்று இயம்புவர். மேலும் "பாட்டின் கண்ணே நிகழும் ஓசை விகற்பமாகும். உயிரெழுத்துக்களுள் குறில், நெடில் ஆகிய மாத்திரையளவு பற்றியும் மெய்யெழுத்துக்களுள் வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து ஆகிய இனம் பற்றியும் செய்யுளுக்குரிய அசை, சீர், அடி, தொடை முதலிய பிற உறுப்புகள் பற்றியும் செய்யுள்கள் வேவ்வேறு ஓசை நலம் உடையனவாய்ப் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் இன்பந்தருவன. இங்ஙனம் ஓதவும் கேட்கவும் சுவை பயக்கும் இனிய ஓசை நலம் வாய்ந்த பாக்கள் வண்ணம் என வழங்கப் பெறும்.

வண்ணம் என்பது நிறத்தைக் குறிக்கும். இதனை “வண்ணம் என்ற யாப்புக் கோட்பாடு” (painting with sounds) என்ற கருத்தில் ஜெர்மன் மொழியிலும் (lant – malarei) வழங்கி வருவதாக அறிகிறது.

“வண்ணந்தானே யொப்பினை செயலும்

அழகுந் சந்தமும் கவியினோசையும்

பண்பு மெனவே பகருமைம் பேர்”

இந்நூற்பா, ஓசையை இனிமைபட உரைப்பதும் வடிவத்தால் பாட்டை அழகு செய்வதும், ஓசை வேற்றுமையை அளவிட்டு வரையறுப்பதும் ஆகிய ஓசையுடைமை, அழகுடைமை, அளவுடைமை என்னும் மூன்று பண்புகளை வண்ணம் எனக்காட்டுகின்றது.

வண்ணம் என்பது சிந்துப்பாடல், கும்மிப்பாடல் போன்ற நாட்டுப்புறப் பாடல்களில் மக்களிடையே வழக்கில் இருந்தது. தொல்காப்பியர் இதனை முதன் முதலில் இருபதாக வகைப்படுத்தியுள்ளார். மேற்கூறியவர்களின் கூற்றுகளினால் வண்ணமானது அழகு, அளவு, இசை, ஒலி, சந்தம், பண்பு, சிறப்பு, மாலை என பல பொருள் தருகிறது.

புலவர்கள் தங்கள் புலமையினை வெளிப்படுத்த இவ்வண்ணவோசையைக் கையாண்டுள்ளனர். இவ்வோசை கொண்டு மற்றவர்கள் மனத்தைக் கவரவும், மன்னனிடம் பரிசுப்பொருள் பெறவும், மன்னனைப் புகழ்ந்தும், இகழ்ந்தும், அறிவுறுத்தியும் பாடவும் முடிந்துள்ளது. இவற்றினால் இன்பம் பயப்பதற்கு ஏற்ப பாடல் அமைவதற்கு வண்ணத்தை அமைத்தனர் எனத்தெரிகிறது.

வண்ணம் தோன்றிய சூழல்

சங்க காலத்தில் கடவுளரைப் போற்றவும் புலவர்கள் தங்கள் வறுமையைக் கருதி பொருள் வேண்டி குறுநில மன்னர்களைப் புகழ்ந்து பாடவும் தங்களின் புலமையைப் பிறர்க்கு வெளிப்படுத்துவதன் காரணமாகவும் தாம் இயற்றும் பாடல்கள் பிறரின் செவிக்கு இனிமையான ஓசையைத் தரும் நயங்களும் வண்ணங்களின் தேவையைப் புலவர்கள் அறிந்து கொண்டு பாடல்களை இயற்றியுள்ளனர்.

ஓரின எழுத்துகள் இணைவதால் ஓர் ஓசை உண்டாகிறது. இதனைத் தமிழண்ணல் “எழுத்துக்களின் சேர்க்கையால் ஏற்படும் சந்தங்கள் வண்ணம்” என்பர். இவர் “வண்ணம் என்பதற்கு பண்பு” என்ற பொருளையும் தருகிறார்.

வண்ணம் என்னும் செய்யுள் உறுப்பு தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தோன்றியதால் “வண்ண இலக்கியத்தின் காலம் வரலாற்றில் சுமார் கி.மு. 700, 800 ஆண்டுகட்கு முந்தியது” என்பர்.

வண்ணம் தோற்றம்

நச்சினார்க்கினியர் வண்ணத்தின் தோற்றம் குறித்து "வளமான இசையமைந்த பா,வண்ணப்பா, வள்-வண், வண் - அம் - வண்ணம். வண்ணம் எழுத்தின் தோற்றத்தில் தோன்றியது. மெய்யில் தோற்றம் எப்படி எழுத்தொடு கொண்டதோ, அப்படிக் கொண்டது வண்ணமும்" என்கிறார்.

நாயக்கர், மராட்டியர் ஆட்சிக்காலங்களில் வண்ணம், சிந்து, கண்ணி, கீர்த்தனம் முதலிய இசை யாப்பு வகைகளும், நாட்டுப்புறப் பா, வடிவங்களும் சிறப்புற வளர்ந்துள்ளன என யாப்பிலாளர்கள் கூறுகின்றார்கள்.

இயற்றமிழ், இசைத்தமிழோடு வண்ணம் நாடகத் தமிழிலும் காணப்படுகிறது. நாடகத்தமிழில் "சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம், என்னும் சொல்வகை நான்கினுள் வண்ணம் என்பதும் ஒன்றாகும். நாடகத்தில் பதினாறு அடிகளால் இயன்ற இசைப்பாடலை வண்ணம்" என்ற பெயரில் வழங்கினர்.

வண்ணம் என்னும் சொல் "பிராகிருதச் சொல்லாகிய வர்ண் என்பதிலிருந்து" தோன்றியதாக கருதப்படுகிறது. மேலும் இவ்வண்ணம் "பிராகிருத மொழியிலிருந்தும் சந்தம் என்ற சொல் சமஸ்கிருத மொழியில் இருந்தும் பெறப்பட்டவை" என்பதாக அறியப்படுகிறது.

தொல்காப்பியர் கையாண்ட வண்ணம் என்ற சொல்லை அருணகிரிநாதர் "சந்தம்" என்ற சொல்லால் கையாண்டுள்ளார். வண்ணம் என்பது ஓசை என்ற பொருளைக் குறிக்கும் "சந்தம் என்பது ஓசைகளை அளக்கின்ற கருவி. ஒலிப்பண்புகளை வரையறுத்துக் காட்டுவது எழுத்தினுடைய வண்மை மென்மைகளை நெறிப்படுத்துவது. இயல், இசை, நாடகத் துறையில் உயிர்நிலையாக நின்று உணர்ச்சிகளைப் பெருக்கிக் காட்டுவது. மொழியினுடைய வளத்தையும் புலவுனுடைய ஆற்றலையும் ஒரே நேரத்தில் இணைத்துக்காட்டி நிற்பது. ஓசை நலம் வழங்கும் வண்ணம் (சந்தம்) ஓசைகளின் சந்திப்பு ஒலிகள் ஆடுகின்ற அரங்கம்" எனப்பொருள் தரப்பட்டுள்ளது.

பண்டைக் காலத்தில் வண்ணம் நாட்டுப்புற மக்களிடையே வாய்வழியாகப் பாடப்பட்டு வந்துள்ளது. அந்நாட்டுப்புற இலக்கியங்களில் உள்ள வண்ணங்களைத் தொல்காப்பியர் இருபதாக வகைபடுத்தியுள்ளனர். ஓரின எழுத்துகள் இணைந்து நடனமாடிச் சென்றதால் வண்ணவோசை உருவாகிறது. மேற்கூறியவாறு வண்ணத்தின் தோற்றம் குறித்துக் கூறும் போது நாட்டுப்புறப்பாடல் மக்களிடையே தோன்றியக்காலத்தில் வண்ணம் தோற்றம் பெற்றிருக்கும் என்றும் கி.மு 700 முதல் 800 ஆண்டுகட்கு முந்தியது என்றும் கருதப்படுகிறது. மேலே கூறப்பட்ட கருத்துகளின் வாயிலாக வண்ணம் மற்றும் சந்தம் என்பவை காலந்தோறும் எவ்வாறு மாற்றம் அடைந்துள்ளது என்பதையும் அதற்கு அறிஞர்கள் எத்தகைய விளக்கம் தருகின்றனர் என்பதையும் இரண்டிற்கும் வேறுபாடுகள் என்னவென்பதையும், அதற்கான அகராதி, அறிஞர்கள் கூறும் விளக்கங்கள் போன்றவையும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

துணைநின்ற நூல்கள்

1. ம.ரா.போ. குருசாமி, நிறங்களும் இலக்கிய மரபும், இலக்கியத்தில் நிறம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2002.
2. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி, ப.1247
3. ஜானகி, ஒப்பியல் நோக்கில் வண்ணமும் நீதியும், ப.16
4. வீ.ப.கா. சுந்தரம் தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புகள், ப.35
5. பிங்கல நிகண்டு , ப.813
6. தி.வே. கோபலையர் தமிழ் இலக்கணப் பேரகராதி, ப.57